**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8064878

1. District மாவட்டம் : **கடலூர்** PS காவல்நிலையம்: **ஊ.த.க. பிரிவு** Year ஆண்டு: **2020** FIR No. மு.த.அ. எண் **07/2020** Date நாள்: **24.10.2020**

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: **7, 7A, 12**
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Criminal Procedure Code — Sections பிரிவுகள்: 102
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் 23.10.2020 17.15 hrs — Date to : நாள் வரை 23.10.2020 21.30 hrs
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.10.2020 — Time நேரம் : 1030 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - IV — Time நேரம் : 1030 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — **கணினி தட்டச்சு**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — **சுமார் 20 கி.மீ. தென்மேற்கு**
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி **தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், நேரடி நெல் கொள்முதல் நிலையம், கோதண்டராமபுரம், கடலூர் மாவட்டம்.**
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் -- District : மாவட்டம் --

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **A. அமுதா**
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் _
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் **இந்தியன்**
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் ----
Place of Issue : வழங்கப்பட்ட இடம் ----
(f) Occupation : தொழில் **உதவி ஆய்வுக்குழு அலுவலர்,**
(g) Address : முகவரி **கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர்.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**1) பழனிவேல் (வயது 40), த/பெ. வெள்ளையன், பருவகால பட்டியல் எழுத்தர், நேரடி நெல் கொள்முதல் நிலையம், கோதண்டராமபுரம், கடலூர்.**
**2) சேகர் (வயது 51), த/பெ.அய்யாவு, (மேஸ்திரி), சாத்தப்பாடி, புவனகிரி தாலுக்கா, கடலூர்**
**3) ராஜா (வயது 35), த/பெ. கோபி, நெ.297, கரைமேடு, கோதண்டராமபுரம், கடலூர்.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**தாமதமில்லை.**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 24.10.2020 ந்தேதி காலை 10.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, அ.அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு; அனுப்புநர் அ. அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். நாள் : 24.10.2020 அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் – நேரடி நெல் கொள்முதல் நிலையம், கோதண்டராமபுரம், கடலூர் மாவட்டம் – திடீர் ஆய்வு சோதனை – உரிய சரியான முகாந்திரம் இன்றி கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் – திடீர் ஆய்வு மகஜரில் கைப்பற்றுதல் – ஒப்படைப்பு –

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24.10.2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

24-10-2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24-10-2020 at 12.00 hrs.

Name: பெயர் அ. திருவேங்கடம்
Rank: நிலை ....................No. எண் .........
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு கடலூர்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு) உதவி ஆய்வுக்குழு அலுவலரான அ.அமுதா ஆகிய நான் 23.10.2020ம் தேதி மதியம் சுமார் 03.00 மணிக்கு எனது அலுவலகத்தில் இருக்கும் போது எனக்கு கிடைத்த தகவலின் படி கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், கோதண்டராமபுரம் கிராமத்தில் தற்காலிகமாக இயங்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் அரசு உத்திரவுப்படி விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்முதல் செய்யும் அதிகாரிகள் நெல்லை கொள்முதல் செய்வதற்கு மூட்டைக்கு ஒரு குறிப்பிட்ட தொகை லஞ்சப்பணம் கொடுத்தால்தான் கொள்முதல் செய்வதாகவும், மேலும், நெல் வியாபாரிகள் தங்களிடத்திலுள்ள நெல் மூட்டைகளை தற்போது இயங்கும், நெல் கொள்முதல் நிலையத்தில் கொள்முதல் செய்யும், நெல் மூட்டைகளுக்கு கூடுதல் விலை கிடைப்பதால் மொத்தமாக தங்களிடம் ஏற்கனவே உள்ள நெல் மூட்டைகளை அங்குள்ள அதிகாரிகளுக்கு லஞ்சப்பணம் கொடுத்து விற்க கொண்டுவருவதாகவும், அதனை மேற்சொன்ன தற்காலிக நேரடி கொள்முதல் நிலையத்தில் உள்ள அதிகாரிகள் லஞ்சப்பணம் பெற்றுக்கொண்டு சுற்றுப்புற கிராமத்திலுள்ள விவசாய நிலத்தில் விளைவித்ததாக கருதி விற்பனை கணக்கு காட்டுவதாகவும், அதற்கு அது சம்மந்தப்பட்ட ஒவ்வொரு நெல் மூட்டைக்கும் பணத்தை நிர்ணயித்து மொத்த கொள்முதல் மேற்சொன்ன தற்காலிக நெல் கொள்முதல் நிலையத்தில் நடைபெறும் ஊழல் சம்மந்தமாக தகவல் கிடைக்கப்பெற்றது. மேற்சொன்ன தகவலை பெற்று உடன் நான் 23.10.2020 மதியம் சுமார் 03.30 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, கடலூர் அலுவலகத்திற்கு நேரில் சென்றேன். நிலையத்தில் இருந்த ஆய்வாளர் திருவேங்கடம் அவர்களிடம் மேற்சொன்ன தகவலை தெரிவித்து திடீர் ஆய்வு மேற்கொள்ள இருப்பதாலும், அதற்கு உதவியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டேன். உடன் ஆய்வாளர் திருவேங்கடம், அவருக்கு கீழ் பணிபுரியும் காவல் ஆளினர்களை தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தினார். தொடர்ந்து மாலை சுமார் 04.30 மணிக்கு நானும், காவல் ஆய்வாளர் திருவேங்கடம் மற்றும் ஆளிநர்கள் அனைவரும் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, கடலூர் அலுவலகத்திலிருந்து அரசு வாகனத்தில் புறப்பட்டு மாலை சுமார் 05.15 மணிக்கு மேற்சொன்ன தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தற்காலிக நேரடி நெல் கொள்முதல் நிலையம் இயங்கும் கோதண்டராமபுரம் கிராமத்திற்கு விசாரித்து வந்து சேர்ந்தோம். மேற்சொன்ன இடமானது, கடலூர் – விருத்தாசலம் ரோட்டிலிருந்து கிழக்குபுறமாக தொண்டமானத்தம் கிராமத்து வழியாக உள்ளே வந்து கரைமேடு பகுதியில் மேற்கு பார்த்து அமைக்கப்பட்டிருந்த தகர ஷீட்டால் அமைக்கப்பட்ட சுமார் 20 அடிக்கு 15 அடி அளவுள்ள கொட்டகை அமைக்கப்பட்டிருந்தது. கொட்டகையினுள் SC No.395 TF V என பொருத்தப்பட்ட மின் மீட்டர் காணப்பட்டது. மேலும், கொட்டகையில் சுமார் 25 அளவுள்ள

அ. [signature]
24-10-2020
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு, கடலூர்.

நெல் பிடிக்கும் சாக்குகள் பண்டல்களாக கட்டப்பட்டு சுமார் 50 பண்டல்கள் தனித்தனியாக கட்டப்பட்டு அடிக்கி வைக்கப்பட்டிருந்தது. கொட்டகையினுள் சுமார் 7 அடிக்கு 2 அடி அளவுள்ள மர டேபில் போடப்பட்டிருந்தது. டேபிலுக்கு முன் இரண்டு பிளாஸ்டிக் நாற்காலிகள் போடப்பட்டிருந்தது. அந்த நாற்காலிகளில் இரண்டு நபர்கள் அமர்ந்திருந்தார்கள், மேலும் இரண்டு நபர்கள் அருகில் நின்றுகொண்டிருந்தனர். மேற்சொன்னவர்கள் பற்றி விசாரிக்க முதலில் நாற்காலியில் அமர்ந்திருந்த நபர், 1) பழனிவேல் (வயது 40), த/பெ. வெள்ளையன், மாரியம்மன் கோயில் தெரு, சாத்தப்பாடி கிராமம், புவனகிரி தாலுக்கா, கடலூர் மாவட்டம் எனவும், தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால் நேரடி நெல் கொள்முதல் நிலையம் இயங்கும் கோதண்டராமபுரம் நிலையத்திற்கு பருவகால பட்டியல் எழுத்தராக நியமிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். தொடர்ந்து மற்றொரு நபர், 2) சேகர் (வயது 51), த/பெ.அய்யாவு, சாத்தப்பாடி கிராமம், புவனகிரி தாலுக்கா, கடலூர் மாவட்டம் எனவும், இந்த இடத்தில் மேஸ்திரியாக பணிபுரிவதாகவும் தெரிவித்தார். மேலும், நின்றிருந்த மூன்று நபர்களை விசாரிக்க 3) ராஜா (வயது 35), த/பெ. கோபி, நெ.297, கரைமேடு, கோதண்டராமபுரம், கடலூர், 4) துரைராஜ் (வயது 54), த/பெ. சந்திரசேகரன், மெயின் ரோடு கப்பரமணியபுரம், கடலூர் வட்டம், கடலூர் மாவட்டம் எனவும், தான் தனியார் நெல் வியாபாரியாக இருப்பதாக விவரம் சொன்னார். அடுத்த நபரைப்பற்றி விசாரிக்க தனது பெயர் 5) ராமலிங்கம், வயது 54, த/பெ. ராஜாங்கம், சாத்தப்பாடி கிராமம், புவனகிரி தாலுக்கா, கடலூர் மாவட்டம் எனவும், தான் தனியார் நெல் வியாபாரியாக இருப்பதாக தெரிவித்தார். மேலும், மேற்சொன்ன கொட்டகைக்கு முன்புறம் சுமார் 2500 நெல் மூட்டைகள் அடுக்கி தனித்தனியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அம்மூட்டைகளை கூலி ஆட்கள் சுமார் 12 நபர்கள் அங்கிருந்த TN34C 5292 லாரியில் ஏற்றிக்கொண்டிருந்தனர். மற்றொரு லாரி TN 46 D 6451 காலியாக நின்றுகொண்டிருந்தது. அவ்விடத்தில் விசாரிக்க நேரடி கொள்முதல் திட்டத்தில் நெல்லை கொள்முதல் செய்தவற்றை பில் போட்டபிறகு லாரியில் ஏற்றுவதாகவும், அங்கிருந்த கூலி ஆட்கள் விவரம் தெரிவித்தனர். தொடர்ந்து மேற்சொன்ன தகர கொட்டகையில் இருந்த பழனிவேலிடம் விசாரிக்க தான் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், கடலூர் மண்டலத்தின் மூலம் கடந்த 12.10.2020 தேதியிட்ட அலுவலக உத்திரவின்படி இந்நிலையத்தில் பருவகால பட்டியல் எழுத்தராக கடந்த 13.10.2020 முதல் பணிபுரிந்து வருவதாகவும், தெரிவித்தார். மேலும், அவரது பணியானது நிலையத்திற்கு விவசாயிகள் கொண்டுவரும் நெல் மூட்டைகளுக்கு விவசாயிகளின் பெயர்களை குறிப்பிட்டு சீனியாரிட்டி அடிப்படையில் டோக்கன் குறிப்பிட்டு வழங்குவது வழக்கம். இதனை பதிவேட்டில் பதிவு செய்யப்படும். அவ்வாறு நெல்லை கொண்டுவரும் விவசாயிகளிடம் இருந்து மொத்த நெல் மூட்டைகளிலிருந்து சுமார் 2 கிலோ அளவிற்கு மாதிரிக்கு எடுத்து, இந்நிலையத்திற்கு அரசால் வழங்கப்பட்ட, ஈரப்பதம் பார்க்கும் கருவி

24-10-2020

காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு கடலூர்.

(moisture measurement machine) யில் ஈரப்பதத்தை பார்த்தால் 17 சதவிதத்தற்கு கீழ் இருக்கும் நெல்லை கொள்முதல் செய்ய தகுதியுள்ளதாக கருதப்படும். தொடர்ந்து மேற்சொன்ன விவசாயிகளிடமிருந்து நெல் மூட்டைகளை நெல் தூற்றும் இயந்திரம் மூலம் தகுதி பார்க்கப்பட்டு, எலெக்ட்ரானிக் எடை மெஷின் மூலம் ஒரு மூட்டைக்கு (சாக்கு எடை சேர்த்து) 40 கிலோ 600 கிராம் பிடித்து தைத்து, பிறகு சம்மந்தப்பட்ட விவசாயிகளின் பெயர், அவரது ஆதார் எண், வங்கி கணக்கு எண், IFSC code, மொத்த மூட்டையின் எண்ணிக்கை, மேலும், கொள்முதல் செய்த மொத்த விலை அனைத்தையும் குறிப்பிட்டு சம்மந்தப்பட்ட விவசாயிக்கு எலெக்ட்ரானிக் மெஷின் மூலம் பில் கொடுக்கப்படும். சுமார் ஒரு வாரத்திற்கு பிறகு வங்கி கணக்கில் பணம் சேர்ந்துவிடும். மேலும், ஒவ்வொரு விவசாயிடமிருந்தும் கொள்முதல் செய்யப்படும் மூட்டைகளின் எண்ணிக்கை விவரம், அவ் விவசாயிகளுக்கு கொடுக்கப்படும், எலெக்ட்ரானிக் ரசீதின் விவரம் உடனுக்குடன் ஆன்லைன் மூலம் சிதம்பரத்தில் இயங்கும் கொள்முதல் நிலைய அலுவலகத்திற்கு தகவல் தெரிந்துவிடும். அதன் அடிப்படையில் ஒவ்வொரு நாளும் அருகில் உள்ள மொத்த கொள்முதல் நிலையத்திற்கு மூட்டைகளை லாரியில் ஏற்றி அனுப்பிவைப்பது வழக்கம். மேலும், கோதண்டராமபுரம் தற்காலிக நெல் கொள்முதல் நிலையமானது, கோதண்டராமபுரத்தை சேர்ந்த அரசப்பன் (வயது 69), த/பெ. பொன்னன், மாரியம்மன் கோயில் தெரு, கரைமேடு, கோதண்டராமபுரம் என்பருக்கு சொந்தமான இடத்தில் இயங்கி வருவதாகவும், மேற்சொன்ன பழனிவேல் தகவல் தெரிவித்தார். தொடர்ந்து மேற்சொன்ன சேகரை விசாரிக்க தான் இந்நிலையத்தில் மேஸ்திரியாக பணிபுரிந்து வருவதாகவும், என்னுடைய பணியானது, மேற்சொன்ன எனது கிராமத்திலிருந்து கூலி ஆட்களை வேலைக்கு அமர்த்துவதும், மூட்டைகளை அளவு பார்க்க, நெல்லை துற்றுவது, மூட்டைகளை தைப்பது, அடுக்கிவைப்பது, லாரியில் ஏற்றுவது, இன்ன பிற வேலைகள் அனைத்திற்கு சேர்த்து இங்கு வேலைவாங்கி வருவதாக தெரிவித்தார். மேலும், எனது தலைமையில் கூலி வேலைக்கு வரும் ஆட்களையும், அவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் வங்கி கணக்கு எண் உட்பட அனைத்தையும், மேற்சொன்ன பழனிவேலிடம் கொடுத்தும், கூலி ஆட்களுக்கு ஒரு மூட்டைக்கு ரூ.3/– வீதம் அரசாங்கம் கூலி நிர்ணயம் செய்துள்ள தொகையை சம்மந்தப்பட்ட கூலி ஆட்களுக்கு நேரடியாக வங்கியின் மூலம் செலுத்தப்படும். மேலும், இந்த இடத்திற்கு விவசாயிகள் கொண்டுவரும் நெல் மூட்டைகளுக்கு ஒரு மூட்டைக்கு ரூ.60/– வீதம் கோதண்டராமபுரத்தை சேர்ந்த ராஜா (வயது 35), த/பெ. கோபி, நெ.297, கரைமேடு, கோதண்டராமபுரம், கடலூர் என்பவர் பெற்றுக்கொள்வார். மேற்சொன்ன ராஜா, மேஸ்திரி என்ற முறையில் எனக்கு மூட்டைக்கு ரூ.20/– கொடுப்பார். இப்பணத்தை மூட்டைகளின் எண்ணிக்கைக்கு தகுந்தவாறு கணக்கீடு செய்து அவரிடமிருந்து பெற்று கூலி ஆட்களுக்கு பகிர்ந்து கொடுப்பேன். மேலும், மீதி இருக்கும் ரூ.40/– ஐ மேற்சொன்ன பில் கலெக்டர்

24-10-2020

பழனிவேல் மற்றும் ராஜாவும் பிரித்துக்கொள்வார்கள். தொடர்ந்து அருகில் நின்றுகொண்டிருந்த துரைராஜ் மற்றும் ராமலிங்கம் ஆகியோர்களை விசாரிக்க, தாங்கள் தனியார் நெல் வியாபாரிகள் என்றும், தாங்கள் நேரடியாக விவசாயிகளிடம் சென்று நெல் மூட்டைகளை குறைந்த விலைக்கு கொள்முதல் செய்து, கொள்முதல் செய்த நெல் மூட்டைகளை அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விற்போம். ஏனென்றால், வெளி மார்கெட்டில் ஒரு நெல் மூட்டையின் விலை ரூ.850/– ஆகும். ஆனால், கொல் முதல் நிலையத்தில் விற்றால் ரூ.1100/– கிடைக்கும் எனவும் கருதி, குறைவிலையில் நெல் கொள்முதல் செய்து இந்த இடத்திற்கு வந்து லாபநோக்கத்தில் விற்பது வழக்கம். மேலும், நாங்கள் தனியார் நெல் வியாபாரிகளாக இருப்பதால், எங்கள் பெயரில் நெல்லை விற்கமுடியாது என்ற காரணத்தால், சுற்றுவட்டார கிராமங்கிலுள்ள விவசாயிகளிடமிருந்து அடங்கல், சிட்டா பெற்று அவர்கள் பெயரில்தான் நாங்கள் விற்பனை செய்கிறோம். மேலும், மேற்சொன்ன வியாபாரம் சம்மந்தமாக தற்காலிக நெல் கொள்முதல் செய்யும், பில் கலெக்டர் பழனிவேல் மற்றும் மேஸ்திரி சேகர் ஆகியோருக்கு ஒரு மூட்டைக்கு ரூ.70/– வீதம் கொடுப்பது வழக்கம். மேற்சொன்ன ரூ.70/– கோதண்டராமபுரம் கிராமத்தைச் சேர்ந்த ராஜா என்பவரிடம் கொடுப்போம். தொடர்ந்து மேற்சொன்ன ராஜாவிடம் விசாரிக்க தான் கிராமத்தார்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்தார் எனவும், தான்தான் இக்கிராமத்திற்கு நேரடி கொள்முதல் நிலையம் கோதண்டராமபுரத்தில் செயல்படுவதற்கு முக்கிய காரணமாக இருந்ததாகவும் தெரிவித்தார். தொடர்ந்து கிராமத்தில் பொது கோயில் கட்டும் பணி நடந்து வருவதாகவும், அதற்காக வேண்டி கிராமத்தாரின் ஒத்துழைப்போடு நேரடி கொள்முதல் நிலையத்திற்கு வரும், விவசாயிகள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து தனிப்பட்ட கமிஷன் தொகையாக ரூ.60/– மற்றும் ரூ.70/– பெறுவது வழக்கம். மூட்டைக்கு ரூ.20/– வீதம் மேஸ்திரிக்கு கொடுப்பேன். மீதமுள்ள பணத்தில் மூட்டைக்கு ரூ.10/– வீதம் நான் எடுத்துக் கொண்டது போக மீதமுள்ள பணம் பில் கலெக்டர் பழனிவேலுக்கு ரூ.30 மற்றும் ரூ.40 வீதம் கொடுப்பது வழக்கம் என தெரிவித்தார். மேற்சொன்ன தகவலின் அடிப்படையில் தற்காலிக நெல் கொள்முதல் நிலையம் இயங்கும் தகர ஷீட் கொட்டகை அலுவலகத்தில் சோதனை எனது தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. சோதனைக்கு என்னுடன் உதவி மேற்சொன்ன காவல் ஆய்வாளர் திருவேங்கடம் மற்றும் அவருடன் வந்த காவல் அலுவலர்கள் உதவிக்கு வைத்துக்கொண்டேன். அதன்படி 1) மேற்சொன் பில்கலெக்டர் என்றழைக்கப்படும் பருவகால பட்டியல் எழுத்தர் பழனிவேலை சோதனையிட அவருடைய பேண்ட் பாக்கெட்டில் பணம் வைத்திருந்தார். அவற்றை எண்ணிப்பார்க்க ரூ.20,540/– (2000 x 8, 500 x 8, 200 x 2, 100 x 1, 20 x 2) பணம் இருந்தது. இப்பணம் சம்மந்தமாக விவரம் கேட்க சரியான முகாந்திரம் தெரிவிக்கவில்லை. 2) தொடர்ந்து அலுவலகத்தின் மேஜையில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஆவணங்களை சோதனையிட ஆவணங்களுக்கு அடியில் பணம் இருந்தது. அவற்றை

24-10-2020

எண்ணிப்பார்க்க ரூ.15,440/– (2000 x 6, 500 x 6, 200 x 1, 100 x 2, 20 x 2) பணம் இருந்தது. இது பற்றி விவரம் கேட்க பழனிவேல் சரியான முகாந்திரம் தெரிவிக்கவில்லை. 3) தொடர்ந்து அலுவலகத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த காலி சாக்கு மூட்டை பண்டல்களை சோதனையிட பண்டல்களுக்கு இடையில் பணம் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. அப்பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.15,000/– (2000 x 3, 500 x 16, 100 x 10) பணம் இருந்தது. அப்பணம் பற்றி விவரம் கேட்க சரியான முகாந்திரம் தெரிவிக்கவில்லை. 4) தொடர்ந்து மேஸ்திரி என்றழைக்கப்படும் சேகரை சோதனையிட சட்டையின் மேல் பாக்கெட்டில் பணம் வைத்திருந்தார். அப்பணத்தை எண்ணிப்பார்க்க, ரூ.12,000/– (2000 x 4, 500 x 2, 100 x 30) பணம் இருந்தது. அப்பணம் பற்றி விவரம் கேட்க, தான் மேஸ்திரியாக இருப்பதாகவும், மூட்டைக்கு மேற்சொன்னபடி ரூ.20/– விவசாயிகள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து கமிஷன் தொகையாக ராஜா என்பவரின் மூலம் பெற்றது என தெரிவித்தார். 5) கோதண்டராபுரத்தைச் சேர்ந்த ராஜா என்பரை சோதனையிட அவரது சட்டை பையில் பணம் இருந்தது. அதை எண்ணிப்பார்க்க ரூ.13,590/– (500 x 23, 100 x 20, 50 x 1, 10 x 4) இருந்தது. 6) அலுவலக மேஜையின் கீழ் 2 அடிக்கு 1 அடி அளவுள்ள மூடி போட்ட மரப்பெட்டி, அப்பெட்டியில் முன் ஆங்கில எழுத்தில் TNCSC என எழுதப்பட்டிருந்தது. அப்பெட்டியின் மூடியை திறந்து பார்க்க அதனுள் பணம் இருந்தது. அதை எண்ணிப்பார்க்க ரூ.8,060/– (500 x 8, 100 x 40, 20 x 2, 10 x 2) இருந்தது. ஆக மொத்தம் மேற்சொன்ன சோதனையின்போது சரியான முகாந்திரம் இன்றியும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையிலும், ஊழலை ஊக்குவிக்கும் வகையில், விவசாயிகள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து அரசு கொள்கைக்கு எதிராக பெறப்பட்ட லஞ்சப்பணம் என தெரியவருகிறது. மேற்சொன்ன சோதனையின் போது கைப்பற்றிய மொத்த தொகை ரூ.84,630/– ஆகும். தொடர்ந்து மேற்சொன்ன பழனிவேலிடம் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ஆவணங்களைப்பற்றி விசாரிக்க கீழ்கண்ட ஆவணங்களை பராமரிப்பதாக சொல்லி ஒவ்வொன்றாக எடுத்துக்கொடுத்தார். அதன்படி 1. கோதண்டராமபுரம் DPC வருகை பதிவேடு, 2.கோதண்டராமபுரம் DPC உயர் அதிகாரிகளின் அறிவுரை / ஆய்வு குறிப்புபதிவேடு, 3.கோதண்டராமபுரம் DPC அடையாள வில்லை பதிவேடு. 4. நெல் பகுப்பாய்வு மற்றும் மாதிரி பதிவேடு. 5. Stock cum Movement register, 6. Daily Abstract register, 7. Purchase day book. ஆகிய பதிவேடுகள் மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் மாலை 5.30 மணி முதல் இரவு 9.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் சோதனையின் போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் மற்றும் அவர்களது குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது

24-10-2020

அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு, கூலி ஆட்களுக்கு, மேஸ்திரிக்கு, சம்பவ இடத்தில் இருந்த இதர நபர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை. இன்று 24.10.2020ந் தேதி காலை 10.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் நேரில் வந்து, 23.10.2020ந்தேதி கடலூர் மாவட்டம், கோதண்டராமபுரம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில், மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமாக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டி, திடீர் ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட அசல் திடீர் ஆய்வு மகஜர், ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.84,630/– மற்றும் திடீர் ஆய்வு மகஜரில் குறிப்பிட்டுள்ள கைப்பற்றப்பட்ட ஏழு ஆவணங்களை இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படுகிறது. மேலும் இது சம்மந்தமாக பதிவு செய்யும் வழக்கின் விவரம் பின்னர் தெரியப்படுத்துமாறும் இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள (ஒப்பம்) (அ. அமுதா) உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். அய்யா, நான் இன்று 24.10.2020 பகல் 10.30 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவை பெற்று, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2020, சட்டபிரிவு 7, 7A, 12 ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 மற்றும் பிரிவு 102 குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதன் அசலை, வாதியின் புகார் மனுவுடன் இணைத்து, கணம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அ. [signature]
24-10-2020
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு, கடலூர்.